04.06.2024

O.S.No.156/2019

வா.சா.1.திரு.பாண்டி ஆசாரி த.பெ.மணி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1.நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் படிக்கத் தெரியும், ஆனால் எழுத தெரியாது. நான் வசிக்கும் வீடு ஐயர்பங்களா கண்ணனேந்தலில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து எங்குள்ளது என்றால் சிறுதூர் பள்ளி அருகே உள்ள வீட்டு மனைகளாகும். நான் குடியிருக்கும் வீட்டிற்கும், தாவாசொத்திற்கும் சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். தாவா சொத்து நான் கிரையம் வாங்கிய போது எந்த சர்வே எண்ணில் இருநததது என்றால் எனக்கு தெரியாது, ஆனால் பட்டா மற்றும் வரி ரசிது ஆகியவை அந்த இடத்திற்கு இருந்தது. என்னை அழைத்து சென்று காண்பித்தார்கள், நான் கிரையம் வாங்கினேன். தாவா சொத்து ஸ்ரீ கோபாலகிருஷ்ண பள்ளிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. எனது பிராதில் தாவா சொத்து கோபாலகிருஷ்ணன் மேல்நிலை பள்ளிக்கு பாத்தியப்பட்ட சொத்து என பத்தி 6-ல் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, நிருபண வாக்குமூலத்தில் பத்தி 3-ல் தாவா சொத்து இஎம்ஜி சௌந்திரராஜன் எனப்வருக்கு பாத்தியப்பட்ட சொத்து என நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

2. தாவா சொத்தை சுற்றிலும் கேட் அமைக்கப்பட்டு மைதானமாக உள்ளது என்றால் சரிதான், தற்போது தான் அவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 2 ஆண்டுகளாக தான் அவ்வாறு கேட் அமைக்கப்பட்டுள்ளது. என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படங்களில் காணப்படும் சொத்து தாவா சொத்துக்கானது என்றால் சரிதான். (அந்த புகைப்படங்கள் **7** எண்ணிக்கை பி**.**வா**.**சா**.**ஆ**-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)**. தாவா சொத்து அடங்கிய சர்வே எண்ணில் கட்டுப்பட்ட மற்ற சொத்துக்களையும் சேர்த்து எத்தனை நபர்கள் கிரையம் வாங்கி உள்ளோம் என்றால் எனக்கு தெரிந்து இந்த வழக்கோடு சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ள 12 நபர்களும் கிரையம் வாங்கி உள்ளோம். தாவா சொத்து பள்ளி விளையாட்டு மைதானமாக உள்ளது என்றால் சுமார் 2 ஆண்டுகளாகதான் அந்த சொத்தை விளையாட்டு மைதானமாக மாற்றி உள்ளனர். கோபாலகிருஷ்ண மேல்நிலை பள்ளி சுமார் 50 ஆண்டுகள் பழைய பள்ளி என்றால் சரிதான். அந்த பள்ளிக்கு மேற்சொன்ன விளையாட்டு மைதானத்தினை தவிர வேறு மைதானம் கிடையாது என்றால் எனக்கு தெரியாது.

3. தாவா சொத்து அடங்கிய சர்வே எண் கொண்ட சொத்து சுமார் 50 ஆண்டு காலமாக விளையாட்டு மைதானமாக இருந்து வருகிறது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றாலும், இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. மேற்படி மைதானத்தில் எத்தனை கேட் உள்ளது என்றால் எனக்கு தெரிந்து ஒரே கேட் தான் உள்ளது. பள்ளியோடு சேர்ந்து மேற்சொன்ன விளையாட்டு மைதானத்திற்கு முள்வேலி அமைத்து கேட் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விளையாட்டு மைதானத்திற்குள் பள்ளி நிர்வாக அனுமதி இன்று யாரும் செல்ல முடியாது என்றால் அந்த கேட் அமைத்த பின்பு அனுமதி இன்றி யாரும் செல்ல முடியாது. மேற்சொன்னவாறு முள்வேலி அமைத்து சுமார் 15 ஆண்டுகள் இருக்குமா என்றால் சுமார் 3 ஆண்டுகள்

இருக்கும். அந்த முள்வேலியை பார்த்தால் மிக பழைமையானது என்பது தெரிய வரும் என்றால் சரியல்ல. தாவா சொத்து அடங்கிய சர்வே எண் உட்பட கோபாலகிருஷ்ண மேல்நிலை பள்ளியை சுற்றிலும் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றாலும், இந்த வழக்கிற்காக அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

4. மேற்படி பள்ளியின் விளையாட்டு மைதானம் உள்பட அனைத்திலும் முள்வேலி அமைத்து 4 கேட்கள் உள்ளன என்றாலும், ஒரு கேட் உள்ளதுதான் தெரியும் என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் வீட்டு மனை எண் தெரியுமா என்றால் பிளாட் எண்.20A நான் கிரையம் வாங்கிய சொத்தாகும். மேற்படி பிளாட் எந்த சர்வே எண்ணில் கட்டுப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. கோபாலகிருஷ்ணகோன் பள்ளி நிர்வாகத்தினை சார்ந்தவர்கள் வசதியானவர்கள் என்றால் எனக்கு தெரியாது. கோபாலகிருஷ்ண கோன் பள்ளி நிர்வாகத்தினை சார்ந்தவர்களுக்கு ஏகப்பட்ட நில புலன்கள் உள்ளது என்றாலும், அவர்கள் மிகவும் வசதி படைத்தவர்கள் என்றாலும் எனக்கு தெரியாது. அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் அசல் கிரைய ஆவணத்தினை நான் பார்த்ததில்லை. அதே போல் அய்யனாருக்கு பொது அதிகார பவர் பத்திரம் எழுதி கொடுத்ததாக சொல்லப்படுவதால் அந்த ஆவணத்தின் நகல் நான் பார்த்ததில்லை. அய்யனார் 1997ம் ஆண்டு தாவா சொத்தினை கிரையம் வாங்கியதாக எனது பிராதில் சொல்லி உள்ளேன்.

5. அய்யனார் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் காலகட்டங்களில் மதுரையில் சார் பதிவாளர் அலுவலகம் உண்டு என்றால் சரிதான். கோபாலகிருஷ்ண கோன் பள்ளி நிர்வாகத்தினருக்கு பாத்தியப்பட்ட சிறுதூர் கிராம சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவற்றில் கட்டுப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு விற்பனை செய்ய வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இல்லை என்றால் சரியல்ல. அய்யனார் மோசடியாக பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட மதுரை சிறுதூரில் உள்ள தாவா சொத்தினை கேரளாவில் உள்ள பாறசாலை என்ற இடத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. மோசடியாக தாவா சொத்தினை பதிவு செய்வதற்கு தான் மதுரையில் பதிவு செய்யாமல் கேரளாவில் உள்ள பாறசாலையில் பதிவு செய்துள்ளார் என்றாலும, இந்த வழக்கிற்காக அதை மறுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-1 கிரைய ஆவணம் மற்றும் வா.சா.ஆ-3 பொது அதிகார ஆவணம் ஆகியவற்றில் எழுதிக்கொடுத்தவர் என்று கண்டுள்ள கையொப்பம் இளம்ஜி சௌந்திரராஜன் என்பவரது கையொப்பம் அல்ல என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

6.அய்யனார் இந்த பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பொறுத்து அவரது பெயருக்கு மோசடியாக வா.சா.ஆ-1 கிரைய ஆவணம், வா.சா.ஆ-3. பொது அதிகார ஆவணம் ஆகியவற்றினை உற்பத்தி செய்து கொண்டு அதன் அடிப்படையில் தாவா சொத்தினை எனக்கு மோசடியாக கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அய்யனாரை சந்தித்து அவர் பெயரில் ஏற்பட்டதாக சொல்லப்படும் வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ-3 ஆகியவற்றினை நான் கேட்டு

பெறவில்லை என்றால் சரிதான். அய்யனாரை நான் பார்த்ததில்லை. தாவா சொத்தில் நான் கற்கால்கள் ஊன்றி இருந்தேன் என்று காண்பிப்பதற்கு புகைப்படம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து காலியிடமாகதான் இருந்தது. நான் கிரையம் வாங்கிய போதும் கல் ஊன்றப்பட்டு காலியிடமாகதான் இருந்தது. நான் கிரையம் வாங்கியபோது கல் ஊன்றப்பட்டு இருந்ததாக கூறுவது இந்த வழககிற்காக நான் கூறும் பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. தாவாசொத்து ஆரம்பத்தில் இருந்தே காலியிடமாக தான் இருந்து வந்தது என்றாலும், பிளாட்கள் பிரித்து கல் ஊன்றப்பட்டதாக நான், இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

7. தாவா சொத்திற்கு நான் பொட்டல் வரி கட்டியுள்ளேன். வா.சா.ஆ-5, வா.சா.ஆ-6, வா.சா.ஆ-8 ஆகியவற்றில் சர்வே எண் தான் குறிக்கப்பட்டுள்ளதே தவிர பிளாட் எண் எதுவும் குறிக்கப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.169/1 ல் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 26 செண்டு என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி வா.சா.ஆ-5, வா.சா.ஆ-6, வா.சா.ஆ-8 ஆகியவைகள் தாவா சொத்திற்கான வரி ரசிதுகள் என்று காண்பிப்பதற்கு எந்த குறிப்புகளும் இல்லாதால் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கு தொடர்பற்ற ஆவணங்கள் என்றால் சரியல்ல. காலி மனையிடத்திற்கு வரி விதிக்கும் நடைமுறையே இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்து ரசிது அனைத்தும் மதுரை மாநகராட்சியில் எனது செல்வாக்கினை பயன்படுத்தி எனக்கு ஆதரவாக வாங்கப்பட்ட ரசிதுகள் என்றால் சரியல்ல. சர்வே எண்.169/1, சர்வே எண்.169/2 ஆகியவற்றில் கட்டுபபட்ட இடங்களை எந்த காலத்திலும் பிரதிவாதிகள் தரப்பினர் யாருக்கும் கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

8. எனது பிராதிலும் சரி, நிருபண வாக்குமூலத்திலும் சரி தாவா சொத்தினை அளந்து அத்துமால் பார்த்து நான் கிரையம் பெற்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான், பிளாட்டில் ஏற்கனவே கற்கள் ஊன்றி பிளாட் எண் பொறிக்கப்பட்டு இருந்ததால் நான் அளவீடு செய்யவில்லை. தாவா சொத்தினை கிரையம் வாங்கும் முன்பு எனது குடும்பத்தாருடன் சேர்ந்து நேரில் சென்று பார்த்துதான் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கும் முன்பு தாவா சொத்து சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் பார்த்துதான் கிரையம் வாங்கினேன். மேற்படி சங்கதியை பிராதிலும், எனது நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றாலும், தற்போது ஆவணங்களை சரிபார்த்து கிரையம் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தினை 1997 ம் ஆண்டு கிரையம் வாங்கினேன். நான் தாவா சொத்தினை கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் போது கோபாலகிருஷ்ண மேல்நிலை பள்ளி இருந்தது. பள்ளியை ஒட்டி விளையாட்டு மைதானம் இருந்தது என்றால் இல்லை, வீட்டு மனைதான் இருந்தது. வீட்டு மனை எந்த காலத்திலும் இருந்தது கிடையாது என்றாலும், இந்த வழககிற்காக வீட்டு மனை இருந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் கேரளாவில் உள்ள பாறசாலை என்ற இடத்தில் 1 செண்டு இடம் இஎம்ஜி சௌந்திராஜன் என்பவருக்கு இருந்ததாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த இடத்தினை நான் பார்த்ததில்லை. அவ்வாறு 1 செண்டு இடம் இருந்ததற்கான அசல் ஆவணத்தினை நான் பார்த்ததில்லை. நான் கூறுவது போல் கேரளாவில் உள்ள பாறசாலை என்ற இடத்தில் இஎம்ஜி சௌந்திராஜன் என்பவரது பெயரில் 1 செண்டு நிலம் இருந்ததில்லை என்றால் சரியல்ல. அய்யனார் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தில் கண்டுள்ள சங்கதியை வைத்துதான் இஎம்ஜி சௌந்திராஜன் பெயரில் பாறசாலையில் 1 செண்டு நிலம் இருந்ததாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தினை கேரளாவில் உள்ள பாறசாலையில் அய்யனார் பெயரில் கிரையம் பெற்றது மோசடியான ஒன்று என்றால் சரியல்ல. கேரளாவில் உள்ள பாறசாலை என்ற இடத்தில் இஎம்ஜி சௌந்திராஜன் என்பவர் 1 செண்டு நிலம் கிரையம் வாங்கியதாக சொல்லப்படுவது பொய்யான சங்கதி என்றாலும், அந்த ஆவணத்தில் இஎம்ஜி சௌந்திராஜன் கையொப்பம் எதுவும் இடவில்லை என்றாலும், அதன் காரணமாகதான் அந்த 1 செண்டுநிலத்திற்கான ஆவணத்தினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

10. வா.சா.ஆ-26 லே அவுட் நகல் என்றால் சரிதான். வா.சா.ஆ-26 லேஅவுட்டில் நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தில் மேற்படி லே அவுட் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே தாவா சொத்தினை பொறுத்து லேஅவுட் போடப்பட்டு இருந்தால் எனது கிரைய ஆவணத்தில் அந்த லே அவுட் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டிருக்கும் என்றாலும், அதை பற்றி சொல்லப்பட்டிருக்கும் என்றாலும், அவ்வாறு இணைக்கப்படவில்லை என்பதால் வா.சா.ஆ-26 லேஅவுட் தாவா சொத்திற்கு தொடர்பற்ற ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-26 லே அவுட்டின் அடிப்படையில் தான் நான் கிரையம் வாங்கினேன் என்று உண்மை தன்மையை நிருபிக்க நான் கடமைப்பட்டவன் என்றால் சரிதான். வா.சா.ஆ-26 லே அவுட்டில் கண்டபடி தற்போது தாவா சொத்து இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து அடங்கிய சிறுதுார் கிராம சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவைகள் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ-1 ஆவணத்திலும் தாவா சொத்து கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து டிரஸ்டு சொத்து என்பதால் உரிய நீதிமன்றத்தில் முன் அனுமதி பெறவில்லை என்றால் சரியல்ல, பெறப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் நான் கூறுவதுபோல் முன் அனுமதி வாங்கவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து பள்ளமும், மேடுமாக இருந்து தண்ணீர் தேங்கி இருந்ததால் பிளாட் போட்டு விற்பனை செய்துள்ளார்கள் என்று நான் சொல்லி உள்ளதால் எதன் அடிப்படையில் நான் அவ்வாறு கூறுகிறேன் என்றால் நான் சென்று நேரடியாக பார்த்தேன், அதன் அடிப்படையில் நான் கூறுகிறேன். தாவா சொத்தினை கிரையம் செய்வதற்கு 17.03.1988 தேதியில் பள்ளிகல்வி துறையிடம் அனுமதி பெறப்பட்டது என்று கூறுவது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. அவ்வாறு பள்ளிகல்வி துறையிடம் அனுமதி பெறப்பட்டதாக அய்யனார் கிரய

ஆவணமான வா.சா.ஆ-1 ல் குறிப்பிட்டுள்ளதை அடிப்படையாக கொண்டு நான் கூறுகிறேன் என்றால் சரிதான். அவ்வாறு அனுமதி பெற்றதற்கான ஆவணங்களை நான் தேடி பார்க்கவில்லை என்றால் சரிதான்.

12. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இருந்து நீதிமன்ற ஆணையர் அமைத்து அளவீடு செய்தார்கள் என்றால் சரிதான், சுமார் 6 மாதங்களுக்கு முன்பு வந்தார்கள். அவ்வாறு அளவீடு செய்த போது நான் உள்பட இதோடு இணைந்த மற்ற வழக்குகள் தாக்கல் செய்த மற்ற அனைவரும் இருந்தோம். அவ்வாறு அளவீடு செய்த போது தாவா சொத்து அமைந்துள்ள சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் அடங்கிய சொத்துக்கள் பள்ளி விளையாட்டு மைதானமாக இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்து ஆரம்ப காலத்தில் இருந்து தற்போது வரை கோபாலகிருஷ்ண மேல்நிலை பள்ளி விளையாட்டு மைதானமாக இருந்து வருகிறது என்றாலும், அதை வீட்டு மனை என்று, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தினை தற்போது என்னால் அடையாளம் காண்பிக்க முடியுமா என்றால் முடியாது, அளந்து பார்த்தால் தான் தெரியும். அய்யனார் மோசடியாக என்னை ஏமாற்றி கிரையம் கொடுத்துள்ளார் என்றாலும், நான் முறையாக ஆவணங்களை சரி பார்க்காமல் இடத்தினை அளந்து பார்க்காமல் கிரையம் பதிந்துள்ளதால் எனது கிரையம் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. அய்யனார் கிரையம் பெற்ற வா.சா.ஆ-1 கிரைய ஆவணம் வா.சா.ஆ-3 பொது அதிகார ஆவணம் மோசடியான ஆவணம் என்பதால் அவரிடம் இருந்து, நான் கிரையம் பெற்றது மோசடியானவை என்றால் சரியல்ல. (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)